**நிவிதிகல பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 01. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 18 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜூன் 30 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, நிவிதிகல பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 ஆண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்ட மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தொகை ரூபா 76,309 இற்காக செலவுகளுக்காக கடன் கொடுத்தோர்களை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்காமையால் மீளாய்வாண்டிற்கான செலவுகள் மற்றும் கடன் கொடுத்தோர் அதே தொகையால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 59,180 தொகை பெறுமதியுடைய நிலையான சொத்துக்கள் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவி தொகை கணக்கின் ஊடாக கணக்கீடு செய்திருந்தமையால் ஆண்டிற்கான சொத்துக்கள் அதே தொகையால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 3,725,150 தொகை பெறுமதியான நிலையான சொத்துக்கள் நன்கொடை ஒதுக்கக் கணக்கினூடாக கணக்கீடு செய்திருக்காமையால் ஆண்டிற்கான சொத்துக்கள் அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான பொருட்கள் மெய்மையாய்தல் அறிக்கையின் பிரகாரம் ரூபா 348,985 பெறுமதியான நிலையான சொத்துக்கள் அகற்றுவதற்கு மற்றும் ஏலவிற்பனை செய்வதற்கு விதந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் அச்செயற்பாடு கணக்காய்வுத் திகதி வரை நடைபெற்றிருக்காத போதிலும் 12 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் குறிப்பிட்ட சொத்துக்கள் கணக்குகளில் இருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

(உ) 2015 மே 15 ஆந் முதல் சபையின் பதவிக் காலம் முடிவடைந்திருந்தது. 2015 மே மாதத்திற்கான மந்திரிமாரின் அமர்வுப் படி ரூபா 190,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவற்றில் மீளளிப்புச் செய்யப்பட்டுள்ள தொகை 2015 அங்கத்தவர்களுக்கு உரித்தான 15 நாட்களுக்கான ரூபா 95,000 தொகை

மாத்திரமே. இதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான சம்பளச் செலவு ரூபா 95,000 இனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

02 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளிடையே ரூபா 166,494 இற்கான வித்தியாசம் காணப்பட்டது.

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 2,278,963 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,130,970 ஆகும்.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி செயற்பாட்டு மிகை ரூபா 852,007 தொகையினால் குறைந்திருந்ததுடன் அவை முன்னைய ஆண்டை விட 27 சதவீதம் குறைவடைதல் என அவதானிக்கப்பட்டது. இதற்கு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் மீண்டுவரும் வருமானம் குறைதல் மற்றும் சம்பளம் மற்றும் படிகளின் 42 சதவீத அதிகரிப்பே முக்கியமாக பாதித்திருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

**2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பீட்டு | உள்ளவாறான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீத வரி மற்றும் வரி | 2,700 | 2,736 | 1,979 |
| வாடகை | 4,536 | 3,873 | 87 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 513 | 290 | 1.5 |
| ஏனைய வருமானங்கள் | 28,060 | 28,865 | 7,665 |

**2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை**

மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் இணக்கஞ் செய்யும் போது வீதவரி மற்றும் வரிகள், வாடகை வருமானம், அனுமதிப்பத்திரக் கட்டணம், எழுத்தாணை மற்றும் தண்டம் மற்றும் ஏனைய வருமான விடயங்கள் சேகரிக்கப்பட்ட வருமாம் பாதீட்டுத் தொகையை விட முறையே 16 சதவீதம், 14 சதவீதம், 43 சதவீதம், 46 சதவீதம் மற்றும் 5 சதவீதம் குறைவடைதலை காட்டியது.

### 2.3.3 வீத வரி

சபையின் வீத வரி பதிவேட்டில் பெயர்களை திருத்துவதற்காக 2014 மற்றும் 2015 ஆண்டின் போது கிடைத்திருந்த வருடாந்தப் பெறுமதி ரூபா 696,085 இற்கான 44 விண்ணப்பப் பத்திரங்களின் விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதற்காக சபை தீர்மானம் ஒன்றின் மூலம் முறைசார் விதமாக துணை விதிகள் ஆக்கப்பட்டு கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.3.4 வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம்

2014 ஆண்டுடன் ஒப்பாக 2015 நவம்பர் மாதம் வரையும் 89 வியாபாரிகளினால் வர்த்தக அனுமதிப்பத்திரம் பெற்றிருக்காமையால் சபை நிதியத்திற்கு ரூபா 52,250 தொகையொன்று இழக்கும் ஆபத்தொன்று ஏற்பட்டிருந்ததென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 2.3.5 ஏனைய வருமானங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிவிதிகல நகரில் நிறுத்தி வைக்கப்படும் வாகனங்களில் இருந்து கட்டணம் அறவீடு செய்வதற்காக வாகன பெண் பொறுப்பாளர் ஒருவர் கமிஷன் அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும் மாதாந்தம் சேகரிக்கப்படும் வருமானம் 2015 ஜனவரி முதல் ஜூன் வரை ரூபா 25,000 ஆகிய குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. மற்றும் சேகரிக்கும் வருமானத்தில் 70 சதவீதம் போன்ற மிகவும் கூடிய கமிஷன் செலுத்தப்பட்டிருந்ததுடன், சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்படும் வருமானத்திற்கு ஒப்பாக செலவு மிகவும் கூடிய பெறுமதி ஒன்றினை கொண்டுள்ளது எனவும், பாரிய எண்ணிக்கையான வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டும் நிவிதிகல நகரத்தில் அவ் வருமான விடயத்தின் மூலம் பிறப்பிக்கப்படும் வருமானம் மிகவும் பலவீன மட்டத்தில் காணப்படுகின்றனது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிவிதிகல வாராந்த சந்தையின் முற்கொடுப்பனவு தொடர்பாக 2004 ஆண்டின் பின்னர் தகவல்கள் ஏதும் சபையில் காணப்படவில்லை எனவும் 2004 ஆண்டிற்கான முற்கொடுப்பனவு பதிவேட்டின் பிரகாரம் ரூபா 369,560 இற்கான தொகை 02 கடைகளில் இருந்து அறவிடப்பட வேண்டியவை என குறிப்பிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை சபையில் பதிவு செய்திருந்த முச்சக்கர வண்டி சங்கங்கள் 4 இன் மூலம் ரூபா 26,600 இற்கான வருமானம் ஒன்றினை பெற்றிருந்த போதிலும் துணை விதிகள் ஆக்கி முறைசார் விதமாக கட்டணம் அறவிடப்படும் நிகழ்ச்சித் திட்டமொன்றினை செயற்படுத்தாமையினால் 2015 ஆண்டு ஜூன் மாதத்தின் பின்னர் அவ் விடயத்தின் மூலம் வருமானம் ஏதும் அறவிடப்படவில்லை.

(ஈ) நிவிதிகல வாராந்த சந்தைக்கு அண்மையிலுள்ள சபைக்கு சொந்தமான 12 கடைகளுக்காக 2011 ஜனவரி 12 திகதிய மற்றும் 2014 திசெம்பர் 05 திகதியில் பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் இரண்டு தடவைகள் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2015 நவம்பர் 09 கணக்காய்வுத் திகதி வரையும் அவ்வாறு திருத்தப்பட்ட வாடகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் சபை ரூபா 42,550 இற்கான வருமானம் ஒன்றினை இழந்திருந்தது.

### 2.3.6 இறைச்சிக் கடை வாடகை

சபையினால் 2014 ஆண்டிற்காக ஆடு மற்றும் கோழி இறைச்சிக் கடையை வாடகைக்கு கொடுப்பதற்காக உடன்படிக்கை கையொப்பமிட்டிருந்த வாடகையாளர் 2014 ஜனவரி மாதம் மாத்திரம் வாடகை செலுத்திவிட்டு பெப்ரவரி மாதம் முதல் வாடகை செலுத்துவதை பகிஷ்கரித்திருந்தமையால் 2014 ஏப்ரல் 29 திகதியில் உள்ளவாறு ரூபா 85,500

தொகையொன்று சபைக்கு கிடைக்க வேண்டியிருந்தது. இந்த நிலுவை தொகையை சபைக்கு அறவீடு செய்வதற்கு கணக்காய்வுத் திகதியாகிய 2015 நவம்பர் 09 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.3.7 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு ஜனவரி முதல் செப்தெம்பர் வரை ரூபா 1,353,372 தொகையொன்றினை இனங்கண்டிருந்த போதிலும் ஜுன் மாதம் முதல் செப்தெம்பர் மாதம் வரை நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 389,415 தொகை சபைக்கு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. அத்துடன் அக்தோபர் முதல் திசெம்பர் வரை நீதிமன்றத் தண்டப்பண வருமானத்தினை இனங்காண்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) முத்திரைக் கட்டணங்களுக்கான பட்டோலைகள் காணிப் பதிவாளர் அலுவலகங்களில் இருந்து தருவித்து உரிய வருமானத்தினை கணக்கீடு செய்ய வேண்டுமெனினும் அவ்வாறு செய்திருக்கவில்லை.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இருப்புக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினால் 2015 ஏப்ரல் 08 திகதி கொள்வனவு செய்திருந்த ரூபா 472,285 தொகை பெறுமதியான 90 ஹியூம் குழாய்கள் தேவையானவர்களை இனங்கண்டு நலன்பெறுவோர் தெரிவு செய்தல் தொடர்பாக முறையான நடைமுறை ஒன்றினை இனங்கண்டிருக்கவில்லை. அப் பண்டங்களை வினியோகித்த பின்னர் பண்டங்கள் பயன்படுத்தப்பட்டதென தொழிநுட்ப உத்தியோகத்தர் அறிக்கையுடன் முறையான தொடர் நடவடிக்கையொன்று சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 மற்றும் 2015 ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடுகளின் மூலம் மந்திரிமாரின் பிரேரணையின் பிரகாரம் மந்திரிமாரினால் பண்டங்கள் வினியோகிக்கப்பட்ட நிறுவனம் அல்லது நபர்களிடையே அப் பண்டங்கள் வழங்கும் போது நலன்பெறுவோர் தெரிவு செய்தல் தொடர்பாக முறையான நடைமுறையொன்று இனங்கண்டிருக்கவில்லை எனவும் அப் பண்டங்களை வினியோகித்த பின்னர் உரிய வேலைக்காக அப் பண்டங்கள் பயன்படுத்தப்பட்டனவா என சபையினால் முறையான தொடர் நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், கொள்வனவு செய்திருந்த மேற்கூறிய பொருட்கள் தொடர்பாக முறையான கூறுவிலை கோரப்பட்டு மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்ட பின்னர் கொள்வனவு செய்யப்பட்டன என சான்றுகள் கணக்காய்விற்கு சமா்ப்பிக்கப்படவில்லை. கொள்வனவு செய்திருந்த மேற்கூறிய பொருட்கள் பண்டங்களில் சில பண்டங்கள் இருப்புப் பதிவேட்டில் பதிவு செய்யப்படாமல் இருந்ததுடன் இருப்பு பதிவேட்டில் உட்படுத்திய பண்டங்களுக்காகவும் வழங்கள் கட்டளைகள் சமர்ப்பித்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான மந்திரிமார் நிதியேற்பாட்டு பதிவேட்டில் பண்டங்கள் வினியோகித்தல் தொடர்பான பரிசோதனையின் போது மந்திரிமாரின் எழுத்துமூல விண்ணப்பம் மற்றும் இடம் தொடர்பாக சபைக்கு எதுவித உறுதிப்படுத்தல்களும் இன்றி ரூபா 37,250 தொகை பெறுமதியான 25 வீதி விளக்கு தொகுதிகள் வழங்கியிருந்ததுடன், அவ்வீதி விளக்குகள் தொடர்பாக எதுவித தொடர் நடவடிக்கையும் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2015 அக்தோபர்

26 திகதி அளவில் களஞ்சிய பதிவேட்டின் பிரகாரம் 14 வீதி விளக்கு தொகுதிகள் களஞ்சியத்தில் காணப்படுவதாக இருப்பு பதிவேட்டில் குறிப்பிட்டிருந்த போதிலும் 2015 நவம்பர் 05 திகதி மேற்கொள்ளப்பட்ட களஞ்சிய பரிசோதனையின் போது வீதி விளக்கு தொகுதிகளுக்கு உரிய பகுதிகள் மாத்திரம் அவதானிக்கப்பட்டன.

(ஈ) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் வீதி விளக்குகள் பொருத்துதல் தொடர்பாக முறையான நிகழ்ச்சித் திட்டமொன்று இனங்காண்பதற்கு முடியாதிருந்ததுடன், வீதி விளக்குகளின் தேவை தொடர்பாக பிரதேசத்தில் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு பொருத்தப்பட்டிருந்த இடங்களை இலகுவாக இனங்காணக் கூடிய விதமாக முறையான பதிவேடு ஒன்று பேணப்பட்டு வீதி விளக்குகளின் தேவைகளை உரிய முறையில் இனங்கண்டு கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்படுவதில்லை என அவதானிக்கப்பட்டது. மேலும், மின்சக்தி மற்றும் வலு சக்தி அமைச்சு செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 திகதிய சுற்றறிக்கையின் மூலம் வீதிகளை அலங்கரித்தல் தொடர்பான அறிவுரைகள் பற்றி கவனம் செலுத்தாமல் வீதி அலங்கரித்தல் நடைபெறுவதுடன் வீதி விளக்குகள் பொருத்துவதற்காக பிரதேச சபை இலங்கை மின்சார சபையுடன் மேற்கொண்டிருந்த இணக்கமும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதேச சபையில் சேவையாற்றிய உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 88,146 இற்கான கடன்மீதியொன்று பல வருட காலமாக திருப்பி அறவீடு செய்வதற்கு முடியாது காணப்பட்டது.

(ஆ) இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 206(இ) ஏற்பாடுகளின் பிரகாரம் வைப்புக்களை திருப்பி செலுத்தும் போது உறுதிச் சான்றில் பெயர் குறிப்பிட்டுள்ள பெறுவோருக்கு கொடுப்பனவு செய்வதற்கு உரிமை உண்டென சான்றுபடுத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2015 ஆண்டின் போது நிவிதிகல வாராந்த சந்தையில் வாடகை சேகரிப்பதற்காக விலைகூறல் சமர்ப்பிக்கும் போது பெற்றிருந்த கேள்வி பிணை ரூபா 25,000 தொகை 2015 பெப்ரவரி 09 திகதி 106 ஆம் இலக்க உறுதிச்சான்றின் மூலம் வேறு நபர் ஒருவருக்கு வழங்கியிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிருவாகம்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மூலம் செயற்படுத்தும் ஊருக்கு ஊர் வீட்டுக்கு வீடு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட 19 நிர்மாண வேலைகளின் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 13,625,430 இற்கான நிர்மாண வேலைகள் தொடர்பாக நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளாமை அல்லது குறிப்பிட்ட நிதியேற்பாடு சபைக்குக் கிடைக்காமையின் காரணத்தினால் ஒப்பந்தவேலைகளின் இறுதிக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

பல்லேகெதர கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமாக காணப்பட்ட பல்லேகெதர தோல்பொருட்கள் தொழிற்சாலை 2014 அக்தோபர் 30 சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த போதிலும் அத் திகதி முதல் 2016 ஜுன் 30 திகதி வரை தொழிற்சாலை விளைவற்று மூடப்பட்டிருந்தது.

## 04. நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 42 செலவு விடயங்கள் தொடர்பாக ரூபா 5,673,854 இற்கான மொத்த ஏற்பாடுகளும் எதுவித தேவைக்கும் பயன்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது 08 செலவுத் தலைப்புகள் தொடர்பாக பாதீட்டு மொத்த ஏற்பாடுகள் ரூபா 1,844,000 தொகையெனினும், அச் செலவு விடயங்களுக்கான உள்ளவாறான செலவு ரூபா 2,448,727 ஆக காணப்பட்ட காரணத்தினால் ரூபா 604,727 இனால் பாதீட்டு ஏற்பாடுகளை மிகைத்திருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது 22 செலவு தலைப்புகளில் இருந்து 13 செலவுத் தலைப்புகளுக்கு ரூபா 10,654,145 இற்கான மொத்த ஏற்பாடுகளும் மாற்றப்பட்டிருந்த போதிலும் அதற்காக சபையின் தீர்மானம் அல்லது குழுவின் விதப்புரையினை பெற்றிருக்கவில்லை.

### 4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்காக வருடாந்த பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் செயற்படுத்தியிருக்கவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவப்பட்டு அதற்கு தேவையான வசதிகள் வழங்கி செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமுல் நடத்துதல்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவப்பட்டு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) ஒப்பந்த நிருவாகம்